பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

31 10 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்தார் வல்லப்பாய் பட்டேலின் 150வது பிறந்தநாள் விழா இன்று நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்பட உள்ளது.
- 3ஆம் வகுப்பு முதல் அனைத்துப் பள்ளிகளிலும் செயற்கை நுண்ணறிவு குறித்த பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப் பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக அதிகரித்து கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- கரூரில் கடந்த மாதம் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை மீண்டும் விசாரணையை தொடங்கியுள்ளது.
- உலகக் கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்தநாள் விழா இன்று நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்பட உள்ளது.

இதை முன்னிட்டு குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்.

அங்கு நடைபெற உள்ள பிரம்மாண்டமான அணிவகுப்பையும் அவர் பார்வையிட உள்ளார்.

இந்த அணிவகுப்பில் எல்லைப் பாதுகாப்புப் படை, மத்திய ரிசர்வ் காவல்படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை, இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் பல்வேறு மாநிலங்களின் காவல்துறையினர் பங்கேற்க உள்ளனர்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதை வலியுறுத்தும் வகையில் 10 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த அலங்கார ஊர்திகளும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கின்றன.

தேசிய பாதுகாப்புப் படை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தங்களது செயல்பாடுகளை விளக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாள் ஆண்டுதோறும் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு நாடு முழுவதும் ஒற்றுமை ஓட்டத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

3ஆம் வகுப்பு முதல் அனைத்துப் பள்ளிகளிலும் செயற்கை நுண்ணறிவு குறித்த பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தில்லியில் சமீபத்தில் நடத்தப்பட்ட தேசிய பள்ளிக் கல்விக்கான பாடத்திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவை உள்ளடக்கிய பாடத் திட்டத்தை உருவாக்க மத்திய இடைநிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ சென்னை ஐ.ஐ.டி. பேராசிரியர் திரு. கார்த்திக் ராமன் தலைமையில் நிபுணர் குழுவை அமைத்துள்ளது.

பொது நன்மைக்காக செயற்கை நுண்ணறிவு என்ற கருத்தை நோக்கி படிப்படியாக கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்படும் என்றும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் செயலாளர் திரு. சஞ்சய் குமார் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு என்பது நம்மைச் சுற்றியுள்ள உலகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு உலகளாவிய திறமையாக கருதப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப் பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக அதிகரித்து கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை வந்த மத்திய நுகர்வோர் மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷியை சந்தித்து நேரில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியதாக மாநில உணவு அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், செரிவூட்டப்பட்ட அரிசியை சோதனை செய்து விரைந்து தரச் சான்றிதழ் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாக கூறினார்.

மாநிலத்தில் நடப்பாண்டு 47 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதுவே அதிகபட்ச கொள்முதல் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் 17 மாவட்டங்களில் 183 கொள்முதல் மையங்களில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாகவும் திரு. சக்கரபாணி கூறினார்.

<<<<>>>>

கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதியிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு, வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கை காரணமாக BSNL நிறுவனம் தொடர்ந்து லாபம் ஈட்டி வருவதாக மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இந்நிறுவனத்தை தொடர்ந்து லாபகரமாக நடத்தவும், வருவாயை பெருக்கவும் புதுதில்லியில் நேற்று அனைத்து மண்டல BSNL தலைமைப் பொது மேலாளர்களுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர், நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் BSNL நிறுவனம் 11 ஆயிரத்து 134 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளதாக தெரிவித்தார்.

இந்த ஆண்டு 27 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்குவதில் BSNL நிறுவனம் தொடர்ந்து தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதிய வருவாய்க்கான வாய்ப்புகளை கண்டறிவதில் அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என்றும் அமைச்சர் திரு. சிந்தியா வலியுறுத்தினார்.

கரூரில் கடந்த மாதம் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தது தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை மீண்டும் விசாரணையை தொடங்கியுள்ளது.

நேற்று கரூர் வருகை தந்த சி.பி.ஐ. அதிகாரிகள் நகர காவல்துறை ஆய்வாளர் மணிவண்ணனை அழைத்து சுமார் ஒரு மணி நேரம் விசாரணை நடத்தினர்.

தலைமைக் காவலர் ஒருவரிடமும் அவர்கள் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணை மேலும் சில நாட்கள் தொடரும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனின் எரிசக்தி கட்டமைப்புகளை குறிவைத்து ரஷ்யா நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

போரினால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மனிதாபிமான ரீதியில் மேற்கொண்டு வரும் உதவிகளுக்கு அரபு நாடுகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

<<<<>>>>

சி.பி.எஸ்.இ. 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலத்தில் நேற்று 21 நக்சலைட்டுகள் ஆயுதங்களுடன் காவல்துறையில் சரணடைந்தனர்.

<<<<>>>>

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் பரிகாரம் செய்வதாகக் கூறி பணம் கேட்டு மோசடி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் தயாரிக்கும் பணி வரும் 4ஆம் தேதி தொடங்கப்படும் என்று மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. சரவணன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கண்காணிப்பு குழுவின் கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று மாவட்ட கண்காணிப்பாளர் திரு. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையில் நாய், பூனை உள்ளிட்ட செல்லப் பிராணிகளை வளர்க்க உரிமம் பெற ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அமைச்சர் திரு. சேகர் பாபு மாநகராட்சி அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

**<<<<>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக் கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

நவி மும்பையில் நேற்று நடைபெற்ற அரையிறுதியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய ஆஸ்திரேலியா 49 புள்ளி 5 ஓவரில் 338 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

339 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா 48 புள்ளி 3 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 341 ரன் எடுத்தது.

ஜெமீமா ரோட்ரிக்ஸ் 127 ரன் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ஹர்மன் ப்ரீத் கவுர் 89 ரன் எடுத்தார்.

நாளை மறுநாள் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் இந்தியா தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று மெல்பர்னில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி இந்திய நேரப்படி இன்று பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் கிரண் ஜார்ஜ் முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய போட்டியில் அவர் 18-21, 21-18, 21-19 என்ற செட் கணக்கில் உலக தரவரிசையில் 13வது இடத்தில் உள்ள பிரான்சின் Toma Junior Popov-வை வென்றார்.

முன்னதாக மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ரக்ஷிதா ரமேஷ் காலிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய போட்டியில் அவர் 19-21, 21-8, 21-13 என்ற செட் கணக்கில் சக நாட்டவரான Shriyanshi Valishetty-யை வென்றார்.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் இறுதிப் போட்டியில் இன்று தில்லி அணி - புனே அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இரவு 8 மணிக்கு தில்லியில் தொடங்குகிறது.

<<<<>>>>

42வது சுர்ஜித் ஹாக்கிப் போட்டியில் இந்தியன் ஆயில் மற்றும் பாரத் பெட்ரோலியம் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

ஜலந்தரில் நேற்று நடைபெற்ற காலிறுதியில் பாரத் பெட்ரோலியம் 3-0 என்ற கோல் கணக்கில் தில்லி ராணுவ அணியை வென்றது.

மற்றொரு காலிறுதியில் இந்தியன் ஆயில் நிறுவனம் 4-3 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் காவல்துறை அணியை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

<<<<>>>>